சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்.24.02.2025.

ம.சா.1 – பிரகலாதன் த.பெ –அங்கமுத்து

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் விருதுநகர், என்.ஜி.ஓ காலனியில் பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மனு சொத்தை 19.02.2018ம் தேதியன்று கிரையம் பெற்றேன். நான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து மனு சொத்தை கிரையம் வாங்கினேன். கிரையம் பெறும் போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அரசு நிறுவனம் என்பதால் நான் வில்லங்கம் பார்க்கவில்லை. நான் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண்.373. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மனு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் 2022ல் வழக்கு சம்மந்தமான நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொண்ட போது நீதிமன்ற நடவடிக்கைகள் எனக்கு தெரியவந்ததால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு இந்த சொத்து எவ்வாறு பாத்தியம் என்பதை தெரிந்து கொண்டேன். இந்து நாடார், முத்து நாடார், வேல்முருகன் மற்றும் சிலரிடம் இருந்து நில ஆர்ஜித தாசில்தார் முறையாக பெற்று 1992ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு கொடுத்ததாக ஆவணங்கள் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். அசல் வழக்கு எண்.47/2011 என்ற வழக்கு நிலுவையில் இருந்தது 2022ம் ஆண்டே எனக்கு தெரியும். அந்த வழக்கில் 24.02.2012ம் தேதியன்று முதல்நிலை தீர்ப்பாணை ஆன விபரம் எனக்கு தெரியுமா என்றால்

2022 க்கு பின்னர் எனக்கு தெரியும். மனு சொத்தை நீதிமன்றம் சுவாதீனம் எடுப்பதிலிருந்து விலக்கு அளிக்க கோரி பரிகாரம் கோரியுள்ளேன். மனு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் அதற்கு அவசியமில்லை. ஏற்கனவே மனு சொத்து சம்மந்தமாக உரிமை பிரச்சனை இருப்பதால் நான் விளம்புகை பரிகாரம் கோர வேண்டும் என்றும், அவ்வாறு கோராததால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ல் முத்துநாடார் மகன் வேல்முருகன் என்று உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்து ஆதியில் ஆத்திக்குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மனு சொத்து 1915 ல் கண்டுள்ள கிரைய ஆவணத்தின் படி ஆத்திக்குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவரின் வாரிசுகளிடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உரிய முறையில் ஆர்ஜிதம் செய்யாமல் உரிமையில்லாதவர்களிடம் நில ஆர்ஜீதம் செய்துள்ளதால் 1992 ல் நில ஆர்ஜிதம் செய்ய அரசு நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் சட்டப்படியானது அல்ல என்பதால் நான் கிரையம் வாங்கிய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மனு சொத்து நிறைவேற்றுதல் மனுவில் மனுதாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், நீதிமன்றத்தில் முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை விபரங்கள் தெரிந்தும் நான் கிரையம் பெற்றுள்ள மனு சொத்து சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும் போது முத்துநாடார் மகன் வேல்முருகனுக்கு பாத்தியப்பட்டது என்று பார்க்கவில்லை என்றும் இந்த மனு தாக்கல் செய்யும் போது தான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். மனு

சொத்தின் உண்மையான உரிமையாளர் ஆத்திகுடும்பன் வாரிசான பரமன் என்பவர் பெயரில் உள்ளதாக உள்ள ம.சா.ஆ.1, 2 ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் கொடுக்கும் போது மனுதாரின் வகையறாக்கள் உரிமை பிரச்சனையாக இருப்பதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரிந்து அவ்வாறு இல்லை. மனுசொத்து உண்மையான உரிமையாளரிடம் ஆர்ஜிதம் செய்யாமல் சட்டவிரோத நபர்களிடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதால் நான் கிரையம் பெற்ற ம.சா.ஆ.3 ஆவணம் சட்டப்படியான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 29.11.2012 ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக ம.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்மானத்திற்கு முன்பே மனு சொத்து சம்மந்தமாக முதல்நிலை தீர்ப்பாணை 24.02.2012 ல் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு சம்மந்தமாக நான் கிரையம் வாங்கிய 2018 லிலேயே தாவா சொத்தில் வில்லங்கம் இருப்பதாக எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணம் நான் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 29.11.2012 ல் போடப்பட்ட தீர்மானத்தை நான் பார்க்கவில்லை. மனு சொத்தை 19.02.2018 ம் தேதி கிரையம் பெற்ற அன்றே மனு சொத்தில் உரிமை பிரச்சனை இருப்பதாக எனக்கு தெரிந்தும் நான் அது சம்மந்தமான வழக்கை நீதிமன்றத்தில் உரிய சட்ட காலத்திற்குள் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள மனு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்தே உரிய காலத்தில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யாததால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உரிமை பிரச்சனை இருக்கக்கூடிய மனு சொத்தை எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோராமல் நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து விலக்கு அளிக்க கோரக்கூடிய பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. தாவா மனு சொத்தில் நான் வீடு கட்டியுள்ளேன். எனது வரைபட அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால் நான் வரைபட அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணம் நான் தாக்கல் செய்துள்ள நில ஆர்ஜிதத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 லும் முத்துநாடார் மகன் வேல்முருகன் என்று உள்ளது என்றால் சரிதான். மனு சொத்து ஆத்திகுடும்ப வகையறாக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 ஆவணம் மோசடியான ஆவணம் என்பதால் நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவின் மனு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.